## Act – 6      சட்டம் - 6

| Prevention of Money Laundering Act, 2002 [PMLA – 2002] | சட்ட விரோத பணபரிவர்த்தனை (அ) பணச்சலவை தடுப்புச் சட்ம், [2002] |
|---|---|
| The law was enacted to combat money laundering in India and has three main objectives | இந்தியாவில் சட்டவிரோத பணபரிவர்த்தனையை தடுக்க உருவாக்கப்பட்ட சட்டம் இதுவாகும். மூன்று முக்கிய நோக்கம் |
| 1. To prevent and control money laundering<br>2. To Provide for confiscation and seizure of property obtained from laundered money<br>3. To deal with many other issue connected with money – laundering in India | 1. பணச்சலவையை தடுத்தல் மற்றும் கட்டுப்படுத்துதல்.<br>2. சட்டவிரோத பணபரிவர்த்தனையில் ஈடுபட்டோரின் சொத்துகளை முடக்குதல் மற்றும் பறிமுதல் செய்தல்<br>3. பணச்சலவையோடு தொடர்புடைய பல விவகாரங்களை கையாள்வதற்காகவும் இச்சட்டம் இயற்றப்பட்டது. |
| **Salient Features** | **சிறப்பியல்புகள்:** |
| RBI, SEBI and IRDAI have been brought under the PMLA, and therefore the provisions of this Act are applicable to all Financial Institutions, banks, mutual funds, Insurance companies and their Financial Intermediaries. | RBI, SEBI மற்றும் IRDAI ஆகிய ஒழுங்குமுறை ஆணையங்களஇச்சட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. மேலும் நிதி நிறுவனங்கள், வங்கிகள், பரஸ்பர நிதியம், காப்பீடு நிறுவனங்களுக்கும் இச்சட்டம் பொருந்தும். |
| The agency monitoring the anti – money laundering activities in India is the Financial Intelligence Unit (FIU) | சட்ட விரோத பணப்பரிவர்த்தனைகளை கண்காணித்து நடவடிக்கை எடுக்கும் அமைப்பு – நிதி குற்றப் பிரிவு ஆகும். |
| The Financial Intelligence Unit is an independent body reporting directly to the Economic Intelligence Council headed by Finance Minister. | இவ்வமைப்பு தன்னிச்சையாக செயல்படும். மேலும் இது பொருளாதார குற்ற ஆணையத்திடம் அறிக்கை சமர்பிக்கும். பொருளாதார குற்ற ஆணையத்தின் தலைவர் - நிதியமைச்சர் ஆவார். |

| **General Information:** | **பொதுத் தகவல்:** |
|---|---|
| The first major initiative in prevention of money – laundering was UN Convention against illicit traffic in Narcotic Drugs and Psychotropic Substances, in 1988 | பணச்சலவையைக் கட்டுப்படுத்த சர்வதேச அளவில் எடுக்கப்பட்ட முதல் நடவடிக்கை – போதைப் பொருள் மற்றும் மூளை செயல்பாட்டை தூண்டும் பொருட்களை சட்டத்துக்கு புறம்பாக கடத்துதலுக்கு எதிரான ஒப்பந்தம், 1988 ஆகும். |
| Major change came with the introduction of Financial Action Task Force (FATF) in 1989. It is an Inter – Governmental body established in 1989 by G – 7 summit in Paris. | மேலும் 1989 – ம் ஆண்டு G7 மாநாட்டில் நிதி செயல்பாடுகள் கண்காணிப்பு ஆணையம் ஏற்படுத்தப்பட்டது. |

## Scheme – 6 / திட்டம் 6

| **Minority - Scheme** | **சிறுபான்மையினர் - திட்டம்** |
|---|---|
| 1. Nai Roshni | 1. நய் ரோஷினி |
| It is a scheme for leadership development among Minority Women | இத்திட்டமானது சிறுபான்மை பெண்களிடம் தலைமைப் பண்பை வளர்க்கிறது. |
| Objective: | நோக்கம்: |
| To empower and instill confidence among Minority women by providing knowledge, tools and techniques for interacting with Government Systems, bank and other institutions at all level. | அரசு நடைமுறைகள், வங்கி, மற்றும் நிறுவனங்களை அணுகக்கூடிய வகையில் கல்வி மற்றும் வழிகாட்டுதல் அளிப்பதன் மூலம் சிறுபான்மை பெண்களிடம் நம்பிக்கை ஏற்படுத்துவதற்காக. |
| 2. Nai Manzil: | 2. நய் மன்சில்: |
| Aims<br>To engage constructively with poor Minority Youth and to help them obtain sustainable and gainful employment opportunities. | குறிக்கோள்:<br>ஏழ்மையான சிறுபான்மையின இளைஞர்களுக்கு உதவி செய்து, தொடர்ந்து அவர்கள் வேலைவாய்ப்பினை பெறும் வகையில் ஊக்கப்படுத்துதல் |
| Integrated Skill Training is being provided to the youth in market - driven skills. | சந்தைக்கும் வேலைவாய்ப்பிற்கும் தேவைப்படும் திறன் கல்வியை ஒருங்கிணைந்த திறன் பயிற்சி மூலம் அளித்தல். |
| Objective | நோக்கம்: |
| Raise awareness and sensitization in health | சுகாதாரம் மற்றும் வாழ்க்கைத் திறன் பற்றி |

We Shine Academy™

| | |
|---|---|
| and life skills | விழிப்புணர்வு வழங்குதல் |
| Mobilize school drop–out Minority youths with formal education and certification upto level 8th or 10th | பள்ளி படிப்பை இடையில் நிறுத்தியவர்களை மீண்டும் படிக்க செய்து 8வது, 10வது சான்றிதழ் வழங்குதல். |
| 3. Nai Udaan: | 3. நய் உதான்: |
| Objective:<br>The scheme to provide financial support to Minority Students for preparation of Main Examination, who clear Prelims conducted by UPSC, SSC, State PSC (TNPSC) etc.<br>Aim<br>To adequately equip them to compete and to increase the representation of the minority in the Civil Services | நோக்கம்:<br>மத்திய பணியாளர் தேர்வாணையம், மாநில பணியாளர் தேர்வாணையம் நடத்தும் தேர்வுகளில் முதல்நிலைத் தேர்வு வெற்றி பெற்று முதன்மை தேர்விற்கு பயிற்சி பெறும் சிறுபான்மை மாணவர்களுக்கு நிதி உதவியளித்தல்<br>குறிக்கோள்:<br>குடிமைப் பணிகளில் சிறுபான்மையினரின் பங்களிப்பு இருக்க வேண்டும் மேலும் அதனை ஊக்கப்படுத்த வேண்டும். |

We Shine Academy